# நிலவேம்புக் குடிநீர் சூரணம் – விளக்கமும் விவாதமும்

**அ. இளமாறன், செ. செந்தில் குமார் &**
**வ. ரங்கநாதன், ப. யாழினி**
*கால்நடை மருந்தியல் மற்றும் நச்சியல் துறை*
*கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஒரத்தநாடு*

டெங்கு எனும் கொடிய நோயினால் தமிழகமே சமீப காலமாக கலங்கிப்போய் இருக்கும் வேளையில் மக்களை மேலும் கலக்கத்தில் ஆழ்த்தியிருக்கிறது. அதன் தடுப்பு மற்றும் குணப்படுத்துதலுக்கு நாம் நிவாரணியாக பயன்படுத்தும் “நிலவேம்புக்குடிநீர் சூரணம் குடித்தால் மலட்டுத்தன்மை உண்டாகும்“ என்கிற மாதிரியான செய்திகள். அதாவது நிலவேம்பு குடிநீரை குடிக்கும் ஆண்களில் விந்து உற்பத்தி பாதிக்கப்பட்டு, அவர்கள் மலட்டுத்தன்மைக்கு ஆளாவார்கள் என்ற குற்றச்சாட்டு ஆங்காங்கே சுமத்தப்படுகிறது.

**உண்மையில் நிலவேம்பு மலட்டுத்தன்மையை உண்டாக்குமா?**

ஆம். நிலவேம்பு இலைக்கு விந்தணு உற்பத்தியை தடுக்கும் குணம் உண்டு என்று எலிகள் மீது நடத்தப்பட்ட ஆய்வு முடிவு உண்மை தான். ஆனால்,1997 ஆம் ஆண்டு Journal of Ethnopharmacology எனும் அறிவியல் ஆய்விதழில் வெளியிடப்பட்டுள்ள ஆய்வு முடிவுகள் வேறு விதமான முடிவுகளை உள்ளது. அதாவது நிலவேம்பை எலிகளுக்கு 60 நாட்கள் கொடுத்து பார்த்து ஆய்வு செய்ததில் அவைகளின் விந்து பைகளில் எந்த விதமான பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை என்று கண்டறியப்பட்டுள்ளது. அறிவியல் ஆய்வு ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு முடிவு வருவது இயல்பானது தான். இவ்வாறான விவாதம் ஒருபுறமிருக்க, நிலவேம்பு குடிநீர் என்பது நிலவேம்பு என்ற ஒற்றை மூலிகை உடைய மருந்து அல்ல என்பது நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்.

**நிலவேம்புக்குடிநீர் சூரணம்**

நிலவேம்புகுடிநீர் சூரணம் என்பது நிலவேம்பு என்ற ஒற்றை மூலிகை உடைய மருந்து அல்ல என்பது நாம் இச்சமயத்தில் அறிந்து கொள்ளவேண்டிய அவசியமான ஒன்றாகும். நிலவேம்புக்குடிநீர் சூரணம் பற்றி “சித்த வைத்திய திரட்டு“ என்ற நூலில் விரிவாக பதிவு செய்யப்பட்டுள்ளது. அதாவது <http:// www. vikatan.com /news /health/ 104248 -alternate- medicines- for dengue. html? utm_ source= vikatan. Com & utm_ medium =s earch &utm_campaign=2> என்பது வெறும் நிலவேம்பு இலையை மட்டும் பயன்படுத்தித் தயாரிப்பதில்லை. நிலவேம்போடு, வெட்டிவேர், கோரைக்கிழங்கு (கோரைப்புல்லின் கிழங்கு), விலாமிச்சை வேர், சந்தனத்தூள், பேய்ப்புடல் (புடலங்காய் வகைத் தாவரம்), பற்படாகம் (ஒரு புல் வகையைச் சேர்ந்தது), சுக்கு, மிளகு போன்ற ஒன்பது மூலிகைகளை சம அளவில் உள்ளடக்கிய கலவை மருந்துதான் நிலவேம்புக்குடிநீர் சூரணம். அதில் நிலவேம்பு என்பது ஒன்பதில் ஒரு பங்காகக் கலக்கப்படும் ஒரு மூலிகைச் சரக்கு.

நிலவேம்பு கோரைக்கிழங்கு வெட்டிவேர் பேய்ப்புடல் சந்தனம் சுக்கு மிளகு பற்படாகம் விலாமிச்சை வேர். நிலவேம்பால் மலட்டுத்தன்மை வரும் என்று செய்தி பரப்புபவர்கள், நிலவேம்பு என்ற ஒற்றை மூலிகையை மட்டும் வைத்து செய்யப்பட்ட ஆய்வுகளை மட்டும் வைத்துக்கொண்டு தவறாகப் புரிந்து கொண்டுள்ளார்கள். எனவே, அடிப்படையில் இது முற்றிலும் தவறான புரிதல். ஏனெனில் வைரஸுக்கு எதிரான எந்த ஒரு ஆன்டி-வைரஸ் மருந்திலும் விந்தணுக்கள் போன்ற உயிரணுக்களை அழிக்கும் சில மூலக்கூறுக்கள் இருக்கும். இது நவீன மருத்துவத்தில் கொடுக்கப்படும் ஆன்டி-வைரஸ் மருந்துகளுக்கும் பொருந்தும். எனவே எடுத்துக்கொள்ளும் அளவைப் பொறுத்தே ஒரு மருந்து நன்மை பயப்பதா அல்லது தீங்கு விளைவிப்பதா எனக் கூற முடியும். மேலும் நிலவேம்பு தவிர மற்ற மூலிகைகள் விந்து உற்பத்தியில் என்ன பாதிப்பை ஏற்படுத்தும் என்பது தொடர்பான ஆய்வுகள் சொல்வதுதான் என்ன?!

**மருத்துவக் குணங்கள்**

நிலவேம்புக்குடிநீர் சூரணத்தில் உள்ள ஒன்பது மூலப்பொருள்களில் நோய் தீர்ப்பதில் நிலவேம்புக்குத்தான் முக்கியப் பங்கு உள்ளது. ஏனெனில் இதில் உள்ள வேதிப்பொருள்கள் காய்ச்சல் தீர்ப்பதுடன் வைரஸ் மற்றும் பாக்டீரியாக்களை அழிக்கும் வல்லமை கொண்டது. இதனால் தான் இதை நிலவேம்புக் குடிநீர் என்கிறோம். நிலவேம்பு மட்டும் டெங்கு கிருமியை எதிர்க்கும் ஆற்றல் இருந்தாலும், இன்ன பிற மூலிகைகளும் சம அளவில் சேர்க்க வேண்டிய காரணத்தை நாம் அறிந்து கொள்ள வேடியது அவசியம். இவற்றில் நிலவேம்பு மற்றும் மிளகு ஆகிய இரண்டும் விந்தணு உற்பத்தியை பாதிக்கும் திறனுள்ளதாக அறிவியல் ஆய்வுகள் கூறுகின்றன. அதே சமயம் சுக்கு, பேய்ப்புடல் மட்டும் கோரைக் கிழங்கு ஆகிய மூன்று மூலிகைகள் பாதிக்கப்பட்ட விந்து உற்பத்தியைச் சரிசெய்து மீண்டும் இயல்பு நிலைக்கு கொண்டு வரும் திறன் கொண்டிருப்பது ஆய்வு முடிவுகளின் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளன.

மேலும் கோரைக்கிழங்கு , பற்படாகம் ஆகியவை காய்ச்சல் தீர்க்கும் சிறந்த மருந்தாகும். பேய்ப்புடல் குடலில் தங்கியுள்ள மாசுக்களை வெளியேற்றும். சுக்கு, மிளகு ஆகியவை உடலின் நொதிகள் மற்றும் என்சைம்களின் சுரப்பைச் சீராக்கும். வெட்டிவேர், விலாமிச்சை வேர், சந்தனம் ஆகியவை உடல் காய்ச்சலால் ஏற்படும் சூட்டைத் தணிக்கும். சுக்கு, மிளகு ஆகியவை உடல் சூட்டை அதிகரிக்கும் இயல்பு உடையது. ஆனால், வெட்டிவேர், விலாமிச்சை வேர், சந்தனம் ஆகியவை இந்த சூட்டைத் தணித்து சமநிலையில் பராமரிக்க உதவுகிறது. ஆகவே நிலவேம்பின் கெட்ட குணங்கள் இதில் உள்ள மற்ற மூலிகைகளால் முறிக்கப்படுகிறது என்பதை நாம் உணர வேண்டும்.

**பகுத்தாய்தல் அவசியம்**

டெங்கு அதிவேகமாகப் பரவிவரும் தற்போதைய இக்கட்டான சூழ்நிலையில், நிலவேம்புக்குடிநீர் சூரணம்தான் ஒரே தீர்வாக உள்ளது. அதேசமயம், ஒருவர் எவ்வளவு குடிக்க வேண்டும், எந்தத் தரக்கட்டுப்பாட்டின் அடிப்படையில் <http:// www. vikatan. com/ news/ health/ 104248-alternate-medicines-for-dengue. html?utm_source=vikatan.com&utm_medium=search& utm_campaign=2, தயாரிக்கப்பட வேண்டும்,யாரின் பரிந்துரையோடு கொடுக்கப்பட வேண்டும் என்பதில் ஒரு வறையறை கொண்டுவருவது அவசியம். மாறாக ஒட்டு மொத்தமாக நிலவேம்புக் குடிநீர் சூரணத்தின் பயன்பாட்டினைக் குறைகூறுவது தவறு.

எனினும் நோய்களைத் தீர்க்க கிடைத்த அரிய வரப்பிரசாதமான நிலவேம்புக் குடிநீர் சூரணமானது சரியாகவும் தரமாகவும் இல்லாவிட்டால் அதன் பலன் முழுமையாகக் கிடைக்காது. நாம் பயன்படுத்தும் <http://www.vikatan.com/news/from-magazine/10946.html> குடிநீர் உண்மையிலேயே நோய் தீர்க்கப் பயன்படுமா என்பது மருந்துகளின் சேர்க்கை மற்றும் அதன் தயாரிப்பு முறையைப் பொறுத்தது. எனவே, கடைகளில் விற்கப்படும் நிலவேம்புச் சூரணப்பொடி அரசால் அங்கீகரிக்கப்பட்டதா? அதில் என்னென்ன மூலப்பொருள்கள் சேர்க்கப்பட்டுள்ளன என்பதையெல்லாம் பார்த்து மருத்துவரின் ஆலோசனையோடு வாங்கிப் பயன்படுத்துவதே சிறந்தது.